## சாவகச்சேரி நகர சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 19 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சாவகச்சேரி நகரசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானம் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | - | 01 | 16இ500 |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 90இ188 | - | |
| விடுபாடுகள் | - | | 01 | 986இ856 |

ஆ.சபைக்கு நன்கொடையாக கிடைக்கப் பெற்ற எட்டு மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும். பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு

கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமையால் நிலையான சொத்தின் பெறுமதி குறைத்துக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 பயன்பாடற்ற ஒதுக்கம்

---------------------------------

சபையின் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக நோக்கம் குறிப்பிடப்படாது ரூபா 1இ437இ046 பெறுமதியான பொது ஒதுக்கங்கள் இறுதிக் கணக்குகளில் காட்டப்படுவது பயன்பாடற்ற ஒதுக்கமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------

3 கணக்கு விடயங்கள் பிரதான பேரேட்டின் பிரகாரம் ரூபா 33இ034இ723 காணப்பட்ட போதும் உபபேரேட்டின் பிரகாரம் ரூபா 33இ284இ043 காணப்படுவதினால் ரூபா 249இ320 வேறுபாடு காணப்படுகிறது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

------------------------------------------------------

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

---------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 30இ787இ181 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவின மிகையாக ரூபா 26இ330இ132 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவின மிகை ரூபா 18இ043இ728 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 22இ935இ835 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 13இ052இ150 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர்311இலÊ உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ை.இறைகளும் வரிகளும் | 1இ351 | 6இ397 | 7இ812 |
| ைை.குத்தகை வாடகைகள் | 16இ651 | 17இ807 | - |
| ைைை.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 4இ245 | 3இ917 | - |
| ை.வேறு வருமானங்கள் | 56இ658 | 27இ847 | 32இ408 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

--------------------------------------

மீளாய்வாண்டிலும் முன்னைய காலங்களிலும் அறவிட வேண்டிய வீதவரி நிலுவைகள் ரூபா 7,811,563 அறவீடு செய்யப்படாதுள்ளது. அறவிடப்படாத வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு சட்டரீதியானதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 நீதிமன்றத் தண்டப்பணங்கள்

-----------------------------------------------

சாவகசசேரி நீதவான் நீதிமன்றிலிருந்து மீளாய்வாண்டுக்கான அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 1இ235இ349 வருமானமாகவோ வருமதியாகவோ கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

2.3.4 முத்திரை கட்டணம்

---------------------------------------------

(அ)2006,2007,2010,2011 மற்றும் 2012 ஆண்டுக்கான காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்ணங்கள் ரூபா 31,073,207 வருமானமாகவும் வருமதியாகவும் சிட்டையிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ)மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 10,734,600 இற்கான பட்டியல் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்தும் கணக்குகளில் வருமானமாகவோ, வருமதியாகவோ கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

2.4 அறவிட வேண்டிய ஊழியர் கடன்கள்

-----------------------------------------------------------

சபையினால் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக இறந்த, பதவி வறிதாக்கப்பட்ட அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 121,946 ஊழியர்களது பணிக்கொடை மற்றும் பிணையாளிகளிடமிருந்து அறவீடு செய்வதற்கு சட்டரீதியானதும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5 வருடாந்த இருப்புக் கணிப்புச்சபை அறிக்கை

-----------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இருப்புக் கணிப்புச் சபை அறிக்கையின் பிரகாரம் இருப்பு பேரேட்டினை ஒப்பீடு செய்தபோது 274 எண்ணிக்கை பொருள்கள் மேலதிகமாகவும், 67 எண்ணிக்கை பொருட்கள் பற்றாக்குறையாகவும் காணப்படுகின்றது.

2.6 சொத்து முகாமைத்துவம்

-----------------------------------------

வாகனப் பயன்பாடு

-----------------------------

அ. மீளாய்வாண்டில் பயன்பாடின்றி 4 வாகனங்கள் சபையில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆ. மீளாய்வாண்டில் பேமு 0761 இலக்க ர்ஜயுஊநு வாகனம் விபத்துக்குள்ளாகி ரூபா 284,033 செலவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆயினும் விபத்து தொடர்பான விபரம் கணக்காய்விற்கு அறவிக்கப்பட்டிருக்கவில்லை.

2.7 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,928,850 பெறுமதியான 19 எண்ணிக்கையான மூலதன வேலைத்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்படாது சில்லறைக் கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

2.8 திண்மக்கழிவு முகாமைத்துவம்

------------------------------------------------

மீளாய்வாண்டில் பிலிசறு திட்டத்திலும் சபை நிதியிலும் ரூபா 3இ522இ684 பெறுமதியான திண்மக்கழிவு நிலையம் அமைக்கப்பட்டது. ஆயினும் திண்மக் கழிவுகள் எரிக்கப்பட்டு வருகிறதே அன்றி எல்லை அமைக்கப்பட்டு கழிவு சேகரிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. ஆயினும்

அமைக்கப்பட்ட திண்மக்கழிவு நிலையம் பயன்பாடின்றி பற்றைகள், குப்பை கூழங்கள் நிறைந்து காணப்படுகின்றது.

.29 உள்ளகக் கணக்காய்வு
---------------------------------------

உள்ளகக் கணக்காய்வு போதியளவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சிதிட்டங்கள் காலாண்டு அறிக்கை நிகழ்ச்சித்திட்டங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்
----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகள் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

அ. வருமானசேகரிப்பு

ஆ. நானாவித வைப்புக்கள்

இ. வரவு செலவுத்திட்டம்

ஈ. வாகன பயன்பாடு

உ. கணக்குகள்